## இணையதளத்தில் பதிவேற்றம் செய்தல்

## விருதுநகர் மாவட்டம்

விருதுநகர் மாவட்டத்தில் புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர். சத்துணவு திட்டத்தின்கீழ் பள்ளி சத்துணவு மையங்களில் காலியாக உள்ள சத்துணவு அமைப்பாளர் / சமையலர் பணியிடங்களுக்கு நேரடி நியமனம் மூலம் தகுதிவாய்ந்த நபர்களைக் கொண்டு கீழ்க்கண்டவாறு நிரப்பப்பட உள்ளது.

| வ. எண். | ஊராட்சி ஒன்றியம் / நகராட்சியின் பெயர் | அமைப்பாளர் | சமையலர் |
|---|---|---|---|
| | **ஊராட்சி ஒன்றியம்** | | |
| 1 | இராசபாளையம் | 10 | 24 |
| 2 | திருவில்லிபுத்தூர் | 10 | 8 |
| 3 | வத்திராயிருப்பு | 8 | 3 |
| 4 | சிவகாசி | 11 | 9 |
| 5 | வெம்பக்கோட்டை | 6 | 18 |
| 6 | சாத்தூர் | 5 | 1 |
| 7 | விருதுநகர் | 10 | 11 |
| 8 | அருப்புக்கோட்டை | 10 | 8 |
| 9 | காரியாபட்டி | 15 | 13 |
| 10 | திருச்சுழி | 7 | 9 |
| 11 | நரிக்குடி | 5 | 6 |
| | நகராட்சி | | |
| 3 | சிவகாசி | 1 | 0 |
| 4 | சாத்தூர் | 1 | 0 |
| | மொத்தம் | **99** | **110** |

**சத்துணவுத் திட்டத்தில் அனைத்து பணியிடங்களுக்கும் பெண்கள் மட்டுமே நியமனம் செய்ய அரசு ஆணையிடப்பட்டுள்ளது.**

விருதுநகர் மாவட்டத்தினை ஒரு அலகாக கொண்டு இனசுழற்சி முறையில் நியமனம் செய்யப்படும்.

**அமைப்பாளர் பணிக்கான தகுதிகள்:**

❖ கல்வித்தகுதி:-

பொது மற்றும் தாழ்த்தப்பட்டோர் (SC) 10வது வகுப்பு தேர்ச்சி பெற்றவராக இருக்க வேண்டும்.

பழங்குடியினர் (ST) 8வது வகுப்பு தேர்ச்சி / தோல்வி பெற்றிருக்க வேண்டும்.

❖ வயது வரம்பு:-

விண்ணப்பம் செய்யும் நாளில் **(25.09.2020ல்)**

பொது மற்றும் தாழ்த்தப்பட்டோர் (SC) 21 வயது நிரம்பியவராகவும் 40 வயதுக்கு மேற்படாதவராகவும் இருக்க வேண்டும்.

பழங்குடியினர் (ST) 18 வயது நிரம்பியவராகவும் 40 வயதுக்கு மேற்படாதவராகவும் இருக்க வேண்டும்.

விதவை மற்றும் கணவரால் கைவிடப்பட்டோர் 20 வயது நிரம்பியவராகவும் 40 வயதுக்கு மேற்படாதவராகவும் இருக்க வேண்டும்.

மாற்றுத்திறனாளிகள் 21 வயது நிரம்பியவராகவும் 43 வயதுக்கு மேற்படாதவராகவும் இருக்க வேண்டும்.

❖ பிறதகுதிகள்:-

நியமன பணியிடத்திற்கும், விண்ணப்பதாரர் குடியிருப்புக்கும் இடையே 3 கிலோ மீட்டர் சுற்றளவிற்குள் வசிப்பவராக இருக்க வேண்டும்.

சத்துணவு மைய கணக்குகளை பராமரிக்கும் தகுதி பெற்றிருக்க வேண்டும்.

அனுமதிக்கப்படும் பணியிடங்களில் 25 சதவீத பணியிடங்கள் விதவைகள் / கணவரால் கைவிடப்பட்டோரைக்கொண்டு நிரப்பப்படும்.

அரசு உதவிபெறும் சிறுபான்மையினர் பள்ளிகளுக்கு இனச்சுழற்சி முறை பின்பற்றப்படமாட்டாது.
மாற்றுத்திறனாளிகள் தங்களது தேசிய அடையாள அட்டை நகல் இணைக்கப்பட வேண்டும்.

**சமையலர் பணிக்கான தகுதிகள்:**

❖ கல்வித்தகுதி:-

**பொது மற்றும் தாழ்த்தப்பட்டோர்:**

சமையலர் :- 8ம் வகுப்பு தேர்ச்சி / தேர்ச்சி பெறாதவர்

**பழங்குடியினர்:**

சமையலர் :- எழுதப்படிக்க தெரிந்திருக்க வேண்டும்

❖ <u>வயது வரம்பு</u>:- விண்ணப்பம் செய்யும் நாளில் **(25.09.2020ல்)**
பொது மற்றும் தாழ்த்தப்பட்டோர் (SC) 21 வயது நிரம்பியவராகவும் 40 வயதுக்கு மேற்படாதவராகவும் இருக்க வேண்டும்.
பழங்குடியினர் (ST) 18 வயது நிரம்பியவராகவும் 40 வயதுக்கு மேற்படாதவராகவும் இருக்க வேண்டும்.
விதவை மற்றும் கணவரால் கைவிடப்பட்டோர் 20 வயது நிரம்பியவராகவும் 40 வயதுக்கு மேற்படாதவராகவும் இருக்க வேண்டும்.

❖ <u>தூர சுற்றளவு</u>:-
நியமன பணியிடத்திற்கும், விண்ணப்பதாரர் குடியிருப்புக்கும் இடையே உள்ள தூரம் 3 கிலோ மீட்டர் சுற்றளவிற்குள் இருக்க வேண்டும்.
(ஊராட்சி / குக்கிராமம் / வருவாய் கிராமம் கணக்கில் எடுத்துக்கொள்ளப்படமாட்டாது.)
அனுமதிக்கப்பட்ட பணியிடங்களில் 25 சதவீத பணியிடங்கள் விதவைகள் / கணவரால் கைவிடப்பட்டோரைக்கொண்டு நிரப்பப்படும்.
அரசு உதவிபெறும் சிறுபான்மையினர் பள்ளிகளுக்கு இனச்சுழற்சி முறை பின்பற்றப்படமாட்டாது.

<u>ஊதிய விகிதம்</u>**<u>(PAY MATRIX)</u>**

சத்துணவு அமைப்பாளர் ரூ. 7,700 - 24,200 (Level 4 - Cell 1):
சமையலர்: ரூ. 4,100 - 12,500 (Level 2 - Cell 1)

மேற்குறிப்பிட்ட சத்துணவு அமைப்பாளர் / சமையலர் காலிப்பணியிடங்களுக்கு விருப்பமுள்ளவர்கள் விண்ணப்பிக்கும் போது பணியிடம் மற்றும் பள்ளி சத்துணவு மையத்தினை குறிப்பிட்டு **25.09.2020 முதல் 03.10.2020** வரை

சம்பந்தப்பட்ட ஊராட்சி ஒன்றிய அலுவலகங்களில் மட்டும் மனுதாரரே அலுவலக வேலை நேரத்தில் நேரில் சமர்ப்பிக்க வேண்டும். விண்ணப்பத்தில் சரியான முழு முகவரி எழுதப்பட வேண்டும். விண்ணப்பத்துடன் கல்வித்தகுதிச்சான்றிதழ், வயதுச்சான்றிதழ், சாதிச்சான்றிதழ், குடும்ப அட்டை மற்றும் இருப்பிடச்சான்று ஆகியவற்றின் அத்தாட்சி செய்யப்பட்ட நகல் இணைக்கப்பட வேண்டும். விதவை மற்றும் கணவரால் கைவிடப்பட்டவர் மற்றும் மாற்றுத்திறனாளிகள் தேசிய அடையாள அட்டை அதற்கான சான்றிதழின் நகல் இணைக்க வேண்டும். நேர்முகத்தேர்வுக்கு கடிதம் அனுப்பப்படும். நேர்முகத்தேர்வின்போது அசல் சான்றிதழ்கள் அளிக்கப்பட வேண்டும்.

மேற்கண்ட பணியிடங்களுக்கான நேர்முகத்தேர்வு அரசு விதிமுறைகளுக்குட்பட்டும், முழுவதும் தகுதியின் அடிப்படையிலும், நேர்மையாகவும், அரசு வழிகாட்டுதல்படியும் மட்டுமே நடைபெறும்.

மாவட்ட ஆட்சியருக்காக,
மாவட்ட ஆட்சியரின் நேர்முக
உதவியாளர்(சத்துணவு),
விருதுநகர் மாவட்டம்.